செ.வெ.எண்: 05 நாள்:02.01.2017

**புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள வெங்கடேஷ்வரா பல்தொழில்நுட்பக்கல்லூரி வாரியத்தேர்வில் மாவட்டத்தில் முதலிடம் பிடித்துள்ளது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ,ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் வெங்கடேஸ்வரா பல்தொழில்நுட்பக்கல்லூரி மாணவ, மாணவிகள் வாரியத்தேர்வில் மாவட்டத்தில் முதலிடம் பெற்றதை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.01.2017) நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்து கூறியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், கைக்குறிச்சியில் வெங்கடேஸ்வரா பல்தொழில்நுட்பக்கல்லூரி இயங்கி வருகிறது. இதில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள் அக்டோபர் 2016ல் நடைபெற்ற வாரியத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று நமது மாவட்டத்திலுள்ள பல்தொழில்நுட்பக்கல்லூரிகளில் முதலிடம் பெற்று சாதனை புரிந்துள்ளனர். இதன்படி முதலாம் ஆண்டில் பயிலும் பாலு என்ற மாணவன் 789/800 மதிப்பெண்களும், இரண்டாம் ஆண்டு சிவில் பாடப்பிரிவில் பயிலும் மாணவன் ரிஸ்வான்கான் 662/700 மதிப்பெண்களும், மூன்றாம் ஆண்டு சிவில் பாடப்பிரிவில் பயிலும் பிரியங்கா என்ற மாணவி 678/700 மதிப்பெண்களும், மூன்றாம் ஆண்டு மெக்கட்ரானிக்ஸ் பாடப்பிரிவில் பயிலும் சௌபாக்யலட்சுமி என்ற மாணவி 670/700 மதிப்பெண்கள் பெற்று முதலிடம் பெற்றுள்ளனர். இவ்வாறு முதலிடம் பெற்று வெங்கடேஸ்வரா பல்தொழில்நுட்பக்கல்லூரிக்கு பெருமை சேர்த்த மாணவ, மாணவிகளை நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்து தெரிவித்ததுடன் தொடர்ந்து சிறந்த முறையில் கல்வி பயின்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் வெங்கடேஷ்வரா கல்விக்குழுமங்களின் தலைவர் திரு.கதிரேசன், தாளாளர்கள் திரு.குமாரசாமி, திரு.கருப்பையா, முதல்வர் திரு.கலியப்பெருமாள், துணைமுதல்வர் திரு.கோபிநாத் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**